(2) THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION (AMENDMENT) BILL, 1958.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I beg leave to introduce the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill[a], 1958.

MR. SPEAKER : The question is :

"That leave be granted for the introduction of the Madras Cutivating Tenants Protection (Amendment) Bill, 1958."

The motion was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(3) THE MADRAS DISTRICT DEVELOPMENT COUNCILS BILL, 1958—(DISCUSSION)—*cont.*

MR. SPEAKER : We shall now proceed to consider the Madras District Development Councils Bill, 1958, clause by clause.

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப்பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். நேற்றையதினம் இந்த ஜில்லா அபிவிருத்தி கவுன்ஸில் சம்பந்தமாக விவாதம் நடந்து கொண்டிருந்தபோது திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பினார்கள். இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னால் இந்த ஜில்லா அபிவிருத்தி கவுன்ஸில் சட்டத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று சொன்னார்கள். அதைப்பற்றி சபா நாயகரிடமிருந்து ஒரு முடிவை எதிர்பார்க்கிறேன். அதே சமயத்தில் சபைத் தலைவர் கனம் சுப்பிரமணியம் அவர்கள் சட்ட இலாகாவில் ஆலோசனை செய்ததின் பேரில் இந்த சட்டத்தை உடனேயே சபையில் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி சட்ட இலாகாவின் பேரில் அந்த பாரத்தைப் போட்டார்கள். அதல்லாமல் அவர்களுடைய சொந்தப் பொறுப்பில் அதைச் சொல்லவில்லை. ஆகவே இது விஷயமாக சபாநாயகரிடமிருந்து ஒரு முடிவு காண விரும்புகிறேன்

THE HON. SRI C. SUBRAMANIAM: கனம் சபாநாயகர் அவர்களே, நான் இதைத் திருப்பியும் சொல்லுவதற்குக் காரணம் இதில் இருக்கக்கூடிய சிக்கல்களை அங்கத்தினர்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளவேண்டும் என்பது தான். இப்போது எழுப்பப்பட்டிருக்கும் சிக்கல் என்னவென்றால் இந்தச் சட்டத்தில் " மதராஸ் பஞ்சாயத் ஆக்ட், 1958 "-ஐப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த ஆக்ட் இன்னும் நம்முடைய பரிசீலனைக்கு வரவில்லை. அதற்கு முன்னால் இந்தச் சட்டத்தை எப்படி நாம் பரிசீலனை செய்யலாம் என்பது தான் பிரச்னையாக இருக்கிறது. இதில் இருக்கக்கூடிய கஷ்டம் என்னவென்றால் இரண்டு மசோதாக்கள் தயாரிக்கப்பட்டு அந்த இரண்டு மசோதாக்களும் இந்த சபை முன் வரவிருக்கின்றன. முதலாவதாக " மதராஸ் பஞ்சாயத் ஆக்ட், 1958 " -ஐ எடுத்துக்கொள்ளலாம் என்றால் அதிலும் இதே மாதிரி டெவலப்மெண்ட் கவுன்ஸில் மசோதாவைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையில் இந்த பில்லிலும் அந்தச் சட்டத்தைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவில் பஞ்சாயத் ஆக்டைப்பற்றி குறிப்பிட்டிருப்பதை நாம் ஆட்சேபித்தால் அந்த மசோதா வரும்போது டெவலப்மெண்ட் கவுன்ஸிலைப்பற்றி குறிப்பிட்டிருப்பதும் சரியான ஆட்சேபமாக இருக்கும். இவ்விதம் இரண்டையும் எடுத்துக் கொள்ள முடியாத நிலை

[a] Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th September 1958.